எங்கெங்கு இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளில் பேருந்து நிலையங்களை அமைக்க வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பொதுவான ஒரு உத்தரவை அப்படி வழங்க இயலாது. எங்கு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வருகிறதோ அந்தப் பகுதிகளில் பேருந்து நிலையம் அமைக்கிறபோது பொது மக்களுடைய நலனையும் கருத்தில் எடுத்துக்கொண்டு அந்த அடிப்படையில்தான் இடத்தையும் தேர்ந்து எடுக்கிறோம். ஆகவே ஒரு பொதுவான உத்தரவை வழங்க இயலாது.

திரு. ந. நஞ்சப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலா மையமாக இருக்கிறது. ஆயினும் அங்கு பேருந்து நிலையம் இல்லை. இதனால் வெளி மாநிலங்களிலிருந்து வந்திருக்கிற மக்களும் அவதிப்படுகிறார்கள். வாகனங்களைக்கூட நிறுத்த முடியவில்லை. ஆகவே சுற்றுலா மையமான ஒகேனக்கல்லில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதுபோன்ற பரிசீலனை அரசாங்கத்திடம் இல்லை.

அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம்.

*2953 **திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம் அனுமன் நதியின் குறுக்கே அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில் அனுமன் நதியின் குறுக்கே மேக்கரை கிராமத்தில் அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. இன்றைய விலைவாசி விவரப்படி இதன் திட்ட மதிப்பீட்டைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்ட மதிப்பீடு அரசுக்குக் கிடைத்ததும் மேற்கொண்டு அரசு நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: தலைவர் அவர்களே, 1974-75 ஆம் வருடத்தில் இந்தத் திட்டத்திற்கான அடையாள நிதி ஒதுக்கீடு செய்தும் இன்றைய வரையிலும் இந்த அணை கட்டப்படவில்லை. ஆகவே ஏறத்தாழ 13 ஆண்டுகளுக்கு முன்னால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த அணைக்கு, புதிதாக அணைகள் கட்டப்படுகிறபோது முன்னுரிமை காட்டப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கதிரவன் அவர்கள் சொன்னதைப்போல 1974-75 ஆம் ஆண்டு இதற்கான அடையாள நிதி ஒதுக்கம் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது செய்யப்பட்டது. அவர் சொன்னதைப்போல 13 ஆண்டுகள் வனவாசம் இந்தத் திட்டத்திற்கு ஏற்பட்டுவிட்டது. கதிரவன் அவர்களுக்கு நான் தெரிவிக்கிறேன்; நிச்சயம் கலைஞர் அவர்கள் இந்த முறை அடவிநயினார்கோயில் திட்டத்திற்குப் பட்டாபிஷேகம் சூட்டுவார்கள் என்பதைத் திட்டவட்டமாக அவர் நம்பலாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அடவிநயினார்கோயில் திட்டத்திற்குப் பட்டாபிஷேகம் சூட்டப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு, ஒரு கண்ணிலே வெண்ணெய்யும், இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் தடவுகிற முயற்சி இந்த அணைத் திட்டம் என்பது தெரியுமா? இந்த அணைத் திட்டம் செயல்பட்டால் எனது சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுரண்டைப் பகுதியில் வாழ்கிற மக்கள் அந்தப் பகுதி பாலைவனம் ஆகிவிடும் என்று பயப்படுகிறார்கள். அந்த உணர்வுகள் அரசுக்குத் தெரியுமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1989 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை அமல்படுத்துகிறபோது அதற்கு ஆதரவும் வரும் ; எதிர்ப்பும் வரும். ஆனால் எந்தப் பகுதி மக்களும் பாதிக்கப்படாத வண்ணம் இந்த அரசு திட்டத்தை வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம் வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நெல்லை மாவட்டத்திற்குத் தொடர்பு உடையது என்பதால்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். முன்பு கழக அரசினால் அடிக்கல் நாட்டப்பட்ட பச்சையாறு அணைத்திட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உருவாகி வரும் அத்திக்கடவுத் திட்டம் எப்போது நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நதியின் குறுக்கே அணை கட்டினால் அந்த அணையின் கீழே இருக்கும் மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும் அது மீறப்படுகிறது. அவ்வாறு மீறப்படும் அணைக்கட்டுகளைப் பொறுத்தவரையில் அக்குறைபாடுகளை நீக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, எங்கு, எப்படி, யாரால் மீறப்பட்டது என்ற விவரத்தைத் தனியாகத் தந்தால் அது குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எலிகுப்பம் அணை.

*3152 திரு ச. அழகுவேலு :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்தில், எலிகுப்பம் அணை (பம்பையாற்றில் கட்டப்படுமா ?